முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

12 | T | I

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
# First Term Test - Grade 10 - 2020

பெயர் : .................................... நேரம் : 03 மணி. 10 நிமி.

## சைவநெறி - I

**கவனிக்க :**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (X) அடையாளமிடுக.

■ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

(01) ஆதியும் அந்தமும் இல்லாதவர்
(1) தேவர் (2) கடவுள்
(3) முனிவர் (4) இந்திரன்

(02) ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தல்
(1) படைத்தல் (2) காத்தல்
(3) அழித்தல் (4) மறைத்தல்

(03) சூரியன் எந்த இராசியில் பிரவேசிக்கும் போது தமிழ் ஆண்டு பிறக்கிறது?
(1) மேடம் (2) மீனம்
(3) கடகம் (4) மகரம்

(04) விநாயகசஷ்டி விரத காலத்தில் பாராயணம் செய்யப்படும் நூல்
(1) திருவிளையாடற் புராணம் (2) பிள்ளையார் கதை
(3) பெரியபுராணம் (4) கந்தப்புராணம்

(05) ஐப்பசி மாதத்தில் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி தினத்தில் கொண்டாடப்படும் பண்டிகை
(1) தைப்பொங்கல் (2) சித்திரை வருடப் பிறப்பு
(3) தீபாவளி (4) ஓணம் பண்டிகை

(06) மனித வாழ்க்கையின் நான்கு படிநிலைகளுள் அடங்காதது
(1) பிரம்மச்சரியம் (2) இல்லறம்
(3) பொருள் (4) துறவறம்

(07) விஷ்ணுமூர்த்தி கிருஷ்ண பகவானாக அவதரித்த இடம்
(1) துவாரகாபுரி (2) கோகுலம்
(3) அயோத்தி (4) அஸ்தினாபுரம்

(08) திருமணத்தின் போது மணமகளின் பெற்றோர் தம் மகளை மணமகனிடம் ஒப்படைக்கும் சடங்கு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பூதாகலம் (2) காப்புக்கட்டுதல்
(3) பூர்ணாகுதி (4) கன்னிகாதானம்


kalvi.lk

(09) சூரியனை முழுமுதற் கடவுளாகப் போற்றும் சமயம்
(1) சைவம் (2) சாக்தம்
(3) காணபத்தியம் (4) சௌரம்

(10) அநபாயச் சோழனது முதலமைச்சராய் இருந்தவர்
(1) சேரமான் (2) சேக்கிழார்
(3) திருவாதவூரர் (4) நம்பியாரூரர்

(11) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன
(1) பஞ்சபூதங்கள் ஆகும். (2) ஐம்பொறிகள் ஆகும்.
(3) ஐம்புலன்கள் ஆகும். (4) பஞ்சமாபாதகங்கள் ஆகும்.

(12) யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளங்குவது
(1) மந்திரங்கள் (2) பிராமணங்கள்
(3) ஆரணியகங்கள் (4) உபநிடதங்கள்

(13) பூர்வகிரியைகளுள் அடங்காதது
(1) சபிண்டீகரணம் (2) திருமணம்
(3) அன்னப்பிராசனம் (4) வித்தியாரம்பம்

(14) கடவுளுக்குரிய இருநிலைகள்
(1) அருவம், உருவம் (2) பதிமுதுநிலை, அருளதுநிலை
(3) சொரூபநிலை, தடத்தநிலை (4) ஆரம்ப நிலை, இறுதி நிலை

(15) திருமுறைகளைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் ஆகியோர்
(1) ஸ்ரீமத் நாதமுனிவர், திருமங்கையாழ்வார் (2) மாணிக்கவாசகர், அரிமர்த்தன பாண்டியன்
(3) நம்பியாண்டார்நம்பி, இராஜராஜ சோழன் (4) குமரகுருபரர், பிரபுடதேவராயர்

(16) நீண்ட ஆயுள், செல்வம், நோய்நீக்கம் முதலானவற்றை தரக்கூடிய மந்திரங்களின் தொகுப்பாக அமையும் வேதம்
(1) இருக்கு (2) யசுர்
(3) சாமம் (4) அதர்வணம்

(17) “படமாடக் கோயில் பகவற்கு” என்ற பாடல்வரி இடம்பெறும் நூல்
(1) திருமந்திரம் (2) திருவாசகம்
(3) திருவிசைப்பா (4) திருப்பல்லாண்டு

(18) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதல் சேக்கிழார் சுவாமிகள் வரையுள்ள எத்தனை அருளாளர்களால் பாடப்பட்ட பனுவல்கள் திருமுறையில் அடங்கியுள்ளன?
(1) இருபத்தொன்று (2) இருபத்தேழு
(3) முப்பது (4) முப்பத்து மூன்று

(19) சைவ சமயத்தவர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது
(1) இருகரங்கூப்பி வணக்கம் கூறுதல் மரபு (2) கை குலுக்கி மகிழ்ச்சி தெரிவித்தல் மரபு
(3) மௌனம் பேணுதல் மரபு (4) குற்றங்கள், குறைகளைப் பற்றிப் பேசுதல் மரபு

(20) பின்வருவனவற்றுள் புற ஆசாரங்களுள் ஒன்று
(1) மனதிலே இறைபக்தியோடு வாழ்தல். (2) விதிப்படி பூசை செய்தல்.
(3) நல்ல சிந்தனையோடு வாழ்தல். (4) நல்ல நடத்தையோடு வாழ்தல்.


kalvi.lk

(21) திருத் தொண்டர்தொகை யாரால் பாடியருளப்பட்டது?

(1) திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் (2) திருநாவுக்கரசு நாயனார்

(3) மாணிக்கவாசகர் (4) ஆலாலசுந்தரன்

(22) மங்கல நீராட்டுதல், மங்கலநாண் பூட்டுதல், அருந்ததி பார்த்தல் என்பன

(1) ஆலய மகோற்சவத்தின் போது நடைபெறும் கிரியைகள்.

(2) திருமண மேடையில் நடைபெறும் கிரியைகள்.

(3) நித்திய, நைமித்தியக் கிரியைகளில் இடம் பெறுகின்றன.

(4) நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இடம் பெறுகின்றன.

(23) "சத்தியமேவ ஜயதே" என்ற வாசகத்தை வாசகத்தைக் கொண்டது

(1) வேதம் (2) புராணம்

(3) இதிகாசம் (4) ஆகமம்

(24) எல்லாக் கிரகங்களையும் ஈர்த்து அவற்றின் நடுநாயகமாக நிற்பவர்

(1) சூரியன் (2) சந்திரன்

(3) புதன் (4) வியாழன்

(25) வசிட்டமாமுனிவரின் மனைவியின் பெயர்

(1) சந்திரமதி (2) அருந்ததி

(3) மேனகை (4) அகலிகை

(26) அட்டபுஷ்பங்களுள் அடங்கும் தொகுதி

(1) உண்மை, தவம், சினம் (2) இரக்கம், கொல்லாமை, பெருமை

(3) பொறுமை, இரக்கம், அறிவு (4) அன்பு, உண்மை, பொறாமை

(27) கடவுளை நோக்கி "உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படான்" என்றும் "சித்தமும் செல்லாச் சேட்சியன்" என்று பாடியவர்

(1) திருவள்ளுவர் (2) பாரதியார்

(3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

(28) திருமுறைப் பாடல்களைப் பாடுவதற்கு முன்னும் பாடிய பின்னும் சொல்ல வேண்டிய மந்திரம்

(1) ஓம் (2) சிவசிவ

(3) திருச்சிற்றம்பலம் 4) நமசிவாய

(29) சனிபகவானின் வாகனம்

(1) கருடன் (2) கிளி

(3) மயில் 4) காகம்

(30) உயிர் உடலில் இருக்கும் போது ஆற்றப்படும் சடங்குகள்

(1) அபரக்கிரியைகள் எனப்படும். (2) பூர்வக்கிரியைகள் எனப்படும்.

(3) நித்தியக்கிரியைகள் எனப்படும். 4) காமியக்கிரியைகள் எனப்படும்.

(31) இறைவன் உவக்கும் இன்மலர்களாக "உள்ளக்கமலம், கூப்பியகைக் காந்தள்" என்பவற்றை வலியுறுத்திக் கூறியவர்

(1) சுவாமி விவேகானந்தர் (2) சுவாமி விபுலானந்தர்

(3) ஆறுமுகநாவலர் (4) அருணகிரிநாதர்

Education கல்வி அධ්‍යාපන NWP EXAM

(32) சூரபத்மன் எனும் அசுரனோடு தொடர்புடைய விரதம்

(1) கந்தசஷ்டி விரதம் (2) விநாயசஷ்டி விரதம்

(3) சிவராத்திரி (4) நவராத்திரி

(33) "ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே.." எனும் பாடலில் கண்டிகை எனக் குறிப்பிடப்படுவது

(1) விபூதி (2) உருத்திராக்கம்

(3) சிவதீட்சை (4) திருவைந்தெழுத்து

(34) "உற்றுமை சேர்வது மெய்யினையே...." என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்

(1) திருப்புன்கூர் (2) திருவாரூர்

(3) திருக்கழுமலம் (4) தில்லை

(35) கடவுள், உயிர்கள் மேல் கொண்ட கருணையினால் ஐந்தொழில்களைப் புரிகின்றார். இவற்றை மேற்கொள்ள கடவுள் எடுக்கின்ற மூர்த்தங்கள் அடங்கிய தொகுதி

(1) நடராசர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர்

(2) பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்

(3) விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர், ஐயப்பன்

(4) நான்முகன், ஆனைமுகன், ஆறுமுகன், பிரபகஸ்பதி, இந்திரன்

(36) சைவசமயத்தின் முழுமுதற் கடவுள்

(1) விநாயகர் (2) சிவபெருமான்

(3) மகாவிஷ்ணு (4) பிரம்மா

பின்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 37 - 39 வரையான வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A - "அன்பும் சிவமும் இரண்டு ...." | D - திருக்குறள் | G - அப்பர் |
| B - "அன்போடு இயைந்த" | E - திருமந்திரம் | H - திருமூலர் |
| C - "குனித்த புருவமும்...." | F - தேவாரம் | I - திருவள்ளுவர் |

(37) "அன்பே சிவம்" எனக் கூறியவரோடு தொடர்புடைய தொகுதி

(1) B D H (2) A E H

(3) C E G (4) B F I

(38) நடராசப் பெருமானின் அருட்கோலத்தைப் புலப்படுத்தும் பாடலோடு தொடர்புடைய தொகுதி

(1) C F G (2) B E I

(3) A F I (4) C D I

(39) திருவள்ளுவரோடு தொடர்புடைய தொகுதி

(1) A F H (2) B D H

(3) C F I (4) B DI

(40) சைவநெறி நின்று வாழ்பவர்கள் தவிர்க்க வேண்டியவை

(1) கடல் கடந்து பிரயாணம் செய்தல், வாணிபம் செய்தல்.

(2) சிறுதெய்வ வழிபாடு, தலயாத்திரை செய்தல்.

(3) பிறசமயங்களை மதித்தல், உயிர்கள் மீது அன்பு காட்டுதல்.

(4) மச்சமாமிசம் புசித்தல், மது அருந்துதல்.

( 1 x 40 = 40 புள்ளிகள்)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

12 | T | II

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

# First Term Test - Grade 10 - 2020

பெயர் : ..................................                    சைவநெறி - II

**கவனிக்க**

பின்வரும் வினாக்களில் முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) **சுருக்கமான விடை தருக.**

(1) இந்து சமயத்தின் முதல் நூல்கள் எவை?

(2) ஒப்புரவு என்றால் என்ன?

(3) தீபாவளி பண்டிகையோடு தொடர்புடைய அசுரன் யார்?

(4) வேதங்களின் மூன்று காண்டங்களும் எவை?

(5) இறைவனின் எண்குணங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

(6) திருக்கூட்டச் சிறப்பு இடம்பெறும் நூல் யாது?

(7) சௌரமானம் என்றால் என்ன?

(8) "இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்...." என்று கூறியவர் யார்?

(9) ஆசாரத்தின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.

(10) சிவபெருமானின் புத்திரர்களாகக் கொள்ளப்படும் மூர்த்தங்களுள் இரண்டைக் குறிப்பிடுக.

( 2 x 10 = 20 புள்ளிகள்)

(02) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையற திருத்தமாக எழுதுக.

(1) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(2) "அங்கமும் வேதமும்...."

(3) "உற்றுமை சேர்வது...."

(4) "குனித்த புருவமும்......"

(5) "நாம் ஆர்க்கும் ......"

( 2 x 5 = 10 புள்ளிகள்)

(03) "சைவசமய நூல்கள் உயர்ந்த விழுமியங்களை வலியுறுத்துகின்றன"

(1) சைவ விழுமியம் என்றால் என்ன?

(2) சைவ விழுமியங்கள் நான்கு தருக.

(3) உண்மைபேசி உத்தமராய் வாழ்ந்த இருவரைக் குறிப்பிடுக.

( 3 + 4 + 3 = 10 புள்ளிகள்)

(04) “கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

(பெரிய புராணம்)

(1) பெரிய புராணம் யாரால் அருளப்பட்டது? இது எத்தனையாம் திருமுறையாக அமைந்துள்ளது?
(2) பெரிய புராணம் எத்தனை விருத்தப்பாக்களையும் காண்டங்களையும் கொண்டுள்ளது?
(3) சிவனடியார்களின் சிறப்புக்கள் இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?

( 3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(05) விரதம் ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படும் ஒருவகைச் சாதனையாகும்.
(1) விரதம் என்றால் என்ன?
(2) கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலப்பகுதி யாது?
(3) கந்தசஷ்டி விரதத்தின் விரத நியதிகள் மூன்று தருக.
இவ்விரதம் எத்தனை ஆண்டுகள் அனுட்டிக்கப்படும்?

( 3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(06) வேதங்களை வகுத்தவர் வேதவியாசர் ஆவார்.
(1) வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
(2) இருக்கு வேதம் கூறும் தெய்வங்கள் நான்கு தருக.
(3) வேதங்கள் சுருதி எனவும் அபௌர்ஷேயம் எனவும் அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

( 2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

(07) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.
(1) புரட்டாதிச்சனி
(2) அன்புடைமை
(3) திருமணச்சடங்கு
(4) காலக்கணிப்பு

( 2 x 5 = 10 புள்ளிகள்)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
## First Term Test - Grade 10 - 2020

### சைவநெறி - விடைப்பத்திரம்

#### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | (11) | 1 | (21) | 4 | (31) | 2 |
| (2) | 4 | (12) | 2 | (22) | 2 | (32) | 1 |
| (3) | 1 | (13) | 1 | (23) | 1 | (33) | 2 |
| (4) | 2 | (14) | 3 | (24) | 1 | (34) | 3 |
| (5) | 3 | (15) | 3 | (25) | 2 | (35) | 2 |
| (6) | 3 | (16) | 4 | (26) | 3 | (36) | 2 |
| (7) | 1 | (17) | 1 | (27) | 4 | (37) | 2 |
| (8) | 4 | (18) | 2 | (28) | 3 | (38) | 1 |
| (9) | 4 | (19) | 1 | (29) | 4 | (39) | 4 |
| (10) | 2 | (20) | 2 | (30) | 2 | (40) | 4 |

( 1 x 40 = 40 புள்ளிகள்)

#### பகுதி II

(01) (1) வேதம், ஆகமம்

(2) மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வதை ஒப்புரவு எனலாம்.

(3) நரகாசுரன்

(4) கர்ம காண்டம், ஞான காண்டம், உபாசனைக் காண்டம்

(5) முற்றும் உணர்தல், இயற்கை உணர்வினனாதல்

(6) பெரிய புராணம்

(7) சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடும் முறை

(8) ஆறுமுகநாவலர்

(9) அக ஆசாரம், புற ஆசாரம்

(10) விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திர்

( 2 x 10 = 20 புள்ளிகள்)

(02) (1) பொருத்தமான தேவாரத்திற்கு புள்ளி வழங்குக. ( 2 x 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

(03) (1) சைவ விழுமியம் என்றால் சைவசமயம் வலியுறுத்துகின்ற மேலான பண்புகள், குணங்கள் எனலாம்.

(2) அன்புடைமை, வாய்மை, பணிவுடைமை, அடக்கமுடைமை

(3) அரிச்சந்திரன், மகாத்மா காந்தி

( 3 + 4 + 3 = 10 புள்ளிகள்)

(04) (1) சேக்கிழார் - பன்னிரண்டாம் திருமுறை

(2) விருத்தப்பா - 4286 காண்டம் 02

(3) அழிதலும் வளர்தலும் அற்ற நிலையான செல்வம் உடையவர்கள்.
உடைந்த மட்பானையின் ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர்கள்.
இறைவனை கும்பிடுதலேயின்றி முக்தியின்பமாகிய வீடு பேற்றுக்கும் ஆசைப்படாத வீரம் உடையவர்கள்

( 3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(05) (1) விரதமாவது மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடல்.

(2) ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறுநாட்கள் அனுட்டிக்கப்படும்.

(3) முருகனை திரிகரண சுத்தியோடு வழிபடல்.
ஆறு நாட்கள் உபவாசம் இருத்தல்.
ஏழாம் நாள் காலையில் பாரணை.
ஆறு ஆண்டுகள்

( 3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(06) (1) அறிவு

(2) இந்திரன், சூரியன், உருத்திரன், வாயு

(3) சுருதி - காதால் கேட்கப்படுவது என்று பொருள்
அபௌர்ஷேயம் - மனிதனால் படைக்கப்படாதவை

( 2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

(07) பொருத்தான விடைக்கு புள்ளி வழங்குக.

( 2 x 5 = 10 புள்ளிகள்)

Education கல்வி

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**